முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1582

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கலியுகத்தைக் காக்க வந்த தேசிகனே
   முருகப்பெருமான் என் அவதார சூட்சுமனே
   முழுமை ஞானம் கொண்ட குரு அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   வரமென அரங்கன் வழி இந்த பேருலகில்
   வல்லமைமிக்க தர்ம ஞான ஆட்சி
3. ஆட்சியதும் அரங்கன் தொண்டர்களைக் கொண்டு
   அகிலத்தில் ஆறுமுகன் யான் நிறுவுவேன்
   வரமாக இந்த சக்தியை வழங்கிதான்
   அரங்கனை இந்த கலியுகத்தில் அவதாரம் எடுக்க வைத்துள்ளேன்
4. உள்ளபடி அரங்கன் வழி
   உயர்வான தர்மம் உலகமெல்லாம் நிரம்பி பெருகப் பெருக
   பெருகவே கலியுகத்தில் தர்மவான்கள் என்கின்ற
   அடையாளம் அரங்கன் உருவாக்கும் ஞானப்படைகள்
5. பெருமளவில் நிரம்பி பரவி
   பேருலகமே தர்ம ஞான லோகமாகும்
   ஆகவே அதுகாலம் ஞானவான்கள் ஆட்சி
   அற்புதம்பட இந்த உலகை தர்மவழி
6. வழிநடத்துகின்ற ஞானத்தலைமையாக ஞானபண்டிதன் என் ஆசியோடு
   இந்த நிகழ்வு நடந்தேறக் கூடும்
   கூடவே அவ்வித அற்புதத்தை நிகழ்த்தும் குருவரங்கன் அருள் பாலிக்கின்ற
   ஈடேற்றம் தரும் ஏழாம்படைவீடு என்வீடு அரங்கனின் பிரணவக்குடில்

7. குடிலைநாடி உலகோர் குறையிலா வந்து தேடித்தேடி அரங்கன் திருவடிபற்றி
தீட்சை பலமாக ஏற்று அனுதினம் அரங்கன் நாமஜெபம் போற்ற
போற்றவே இந்த கலியுகத்தில் மாற்றம்
புண்ணிய வடிவில் நிகழக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–